# மணப்பாறை நகராட்சி

**2018 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ( 24.08.2018) 24 –ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>24.08.2018</td><td>பொருள் – 1<br>அரசாணை எண்.137 வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை நாள்.09.11.2017 –ன்படி வெளியீடு செய்யப்பட்ட தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் 2017 (Tamil Nadu Biological Diversity Rules 2017)–ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.12064/2018/P3 நாள்.31.07.2018 ல் அறிவுறுத்தியுள்ளவாறும் மணப்பாறை நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி பல்லுயிர் பன்மிய கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது கூட்டத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும்.<br><table>
<tr><th>வ.எண்</th><th>பெயர் மற்றும் முகவரி</th></tr>
<tr><td>1.</td><td>திரு.GNR ஸ்ரீதரன், 3/289 புது காலனி, தி.ஆலை (அஞ்சல்), மணப்பாறை.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எம்.மாணிக்கம், அண்ணா நகர், மணப்பாறை.</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி.டி.அனிதா, 24கல்லாத்துப்பட்டி, மணப்பாறை.</td></tr>
<tr><td>4.</td><td>திரு.சேவியர், பாரதியார் தெரு, மணப்பாறை.</td></tr>
<tr><td>5.</td><td>திரு.மதி உதயன், அண்ணாவி நகர், மணப்பாறை.</td></tr>
<tr><td>6.</td><td>திருமதி.அ.கௌசல்யா பாண்டி, 157 சேதுரெத்தினபுரம், மணப்பாறை.</td></tr>
</table>அ.கு<br>பதிவு செய்யலாம்</td><td>தீர்மான எண். 412<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>24.08.2018</td><td>பொருள் – 2<br>அரசு ஆணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள்.19.07.2018ன் படி, உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள சொத்துவரி விதிப்புகளை, 01.04.2018 முதல் பின்வரும் வீதத்தில் சொத்துவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.<br>1. குடியிருப்பு கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு – 50 % க்குள்.<br>2. குடியிருப்பு வாடகை கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு – 100 % க்குள்.</td><td>தீர்மான எண். 413<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 3. வணிக உபயோக கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு – 100 % க்குள்.<br><br>அதன் பின்னர் வரப்பெற்றுள்ள அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மாந 4 ) துறை நாள்.26.07.2018ன் படி, மேற்கண்ட உயர்வு சதவீதத்தில் திருத்தம் செய்து, பின்வரும் வீதத்தில் சொத்துவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.<br>1. குடியிருப்பு கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு – 50 % க்குள்.<br>2. குடியிருப்பு வாடகை கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு – 50 % க்குள்.<br>3. வணிக உபயோக கட்டிடங்களுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு – 100 % க்குள்.<br>மேற்கண்ட அரசாணைகள் தனி அலுவலர் அவர்களின் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u> -**<br>1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட அரசாணையின்படி சொத்துவரி பொதுதிருத்தம் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.<br>3. சொத்துவரி பொதுதிருத்தம் தொடர்பான அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினங்களுக்கும் அனுமதி அளிக்கலாம்.<br>4. சொத்துவரி தொடர்பான பொது அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்கான செலவினஙகளுக்கும் அனுமதி அளிக்கலாம்.<br>5. சொத்துவரி தொடர்பான படிவங்களை இளம் நீல நிறம், இளம் சிவப்பு நிறம் மற்றும் வெள்ளை நிறங்களில் அச்சடிப்பதற்கும், அதற்கான செலவினங்களுக்கும் அனுமதி அளிக்கலாம்.<br>**<u>கோப்பு எண். 1877/2018/அ1</u>** | |
| 24.08.2018 | **பொருள் – 3**<br>இந்நகராட்சியில் திரு. ஆர்.சுவாமிநாதன் என்பவர் இளநிலை உதவியாளராக பணியாற்றி , பணியில் தாழ்வு காரணமாக நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டது. அதனை எதிர்த்து திரு. ஆர்.சுவாமிநாதன் (லேட்) மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்ந்த வழக்கு எண். W.P(MD) 9354/2006 –ன் தீர்ப்பில் வாதிக்கு ஓய்வுபெற அனுமதித்தும் பணப்பயன் வழங்கவும் நீதிப்பேராணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கின் தீர்ப்பாணைக்கு, சென்னை உயர்நீமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீடு வழக்கு எண். W.A(MD) No. 367/2018 மற்றும் C.M.P (MD) No.2255/2018ல் திரு.ஏ.கே. பாஸ்கரபாண்டியன், சிறப்பு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆஜரானதற்கு வழக்குக் கட்டணமாக ரூ.7500/– கோரியுள்ளார். மேற்கண்ட தொகையினை வழங்கவும், செலவினத் | **தீர்மான எண். 414**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | தொகையினை வருவாய் நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 24.08.2018 | **பொருள் – 4**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN45 AZ 2257 –க்கு மின்கலன் (Battery) பழுதடைந்து உள்ளதால் புதியதாக பேட்டரி வாங்கி பொருத்தவும் அதற்கான தோரய செலவினம் ரூ.12500/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அ.கு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2150/2018/எச்1 நாள்.20.08.2018 ) | **தீர்மான எண். 415 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.08.2018 | **பொருள் – 5**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TAX 2402 –க்கு மின்கலன் (Battery) பழுதடைந்து உள்ளதால், புதியதாக பேட்டரி வாங்கி பொருத்தவும் அதற்கான தோரய செலவினம் ரூ.25000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2150/2018/எச்1 நாள்.20.08.2018 ) | **தீர்மான எண். 416 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.08.2018 | **பொருள் – 6**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN45 AZ 2257 –க்கு துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படி , லாரி பழுது 1.ஹைட்ராலிக் சேஸ் பெண்ட் சரி செய்தல் மற்றும் ஹைட்ராலிக் ஜாக்கி ஆயில் லீக் சரி செய்தல் மற்றும் அனைத்து எலக்ரானிக் பழுதுகளை நீக்க தோரய செலவினம் ரூ.19700/– செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.2150/2018/எச்1 நாள்.20.08.2018 ) | **தீர்மான எண். 417 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**